சுருக்கம்

பொருட்காட்சி – ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டிற்கு ஒரு முறை அரசு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை நடத்துதல் – 2011–12 நிதி ஆண்டில் 32 மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றிற்கு ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.3,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.41

நாள்.10.02.2012
தை 27
திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்கவும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2011 அன்று செய்தித்துறை ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்.

–––––

ஆணை:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2011 அன்று செய்தித் துறை ஆய்வு கூட்டம் நடைபெற்றபோது "ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டிற்கு ஒரு முறை அரசு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி நடத்தலாம்" என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2. தற்போது நடைமுறையிலுள்ள கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகள் மாவட்ட தலைநகரில் மட்டும் நடைபெறுகிறது. மாவட்டங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில் அனைத்து துறைகள் பங்குகொள்ளும் அரசு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை நடத்தினால் மிகப்பயனுள்ளதாக இருக்கும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தினை செயல்படுத்த இத்துறை கருதுகிறது.

3. அதனடிப்படையில் தமிழக அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் திருவிழாக்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்குகொள்ளும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களில் அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியினை நடத்துவது அரசின் நோக்கத்தை ஈடேற்றுவதாக அமையும் என கருதப்படுகிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்தில் நடைபெறும் திருவிழாக்கள், மாண்புமிகு முதலமைச்சர், மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்குகொள்ளும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களில்

அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள், மாண்புமிகு முதலமைச்சர் கலந்துக்கொள்ளும் அரசு நிகழ்ச்சிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துக்கொள்ளும் அரசு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை புகைப்படங்களாக தொகுத்து புகைப்படக் கண்காட்சியினை ஆண்டிற்கு ஒருமுறை நடத்த அரசு ஆணையிடுகிறது.

4. இதனடிப்படையில்2011–12 நிதி ஆண்டில் நிகழ்வு ஒன்றிற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்து ஆயிரம் மட்டும்) வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூ.3,20,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. ரூ.10,000/–த்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செலவின விவரங்கள் பின்வருமாறு:-

| வ.எண். | செலவின விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பந்தல், அரங்குகள் மற்றும் பேனல் போர்டு வைக்க செலவினம் | 5,000 |
| 2 | மின் பணி செலவினம் | 2,000 |
| 3 | புகைப்படங்கள் லேமினேஷன் மற்றும் பிரிண்ட் செய்தல் செலவினம் | 2,500 |
| 4 | சில்லரை செலவினம் | 500 |
| | மொத்தம் | 10,000 |

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2220 செய்தி மற்றும் விளம்பரம் – 60 ஏனையவை–106 கள விளம்பரம்–I திட்டத்தில் சேராதது – AH பொருட்காட்சி–08 விளம்பரமும் பிரச்சாரமும் – 02 பொருட்காட்சி” (த.தொ.கு.2220 60 106 AH 0822).

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2011–12 ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை மேற்கொள்ள இயக்குநர்/துணைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

மேலும் பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2011–12 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர்/துணைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.3,20,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தொகையிலிருந்து தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு பகுதி-Iல் விதி 99–ன் கீழ் தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் புகைப்படக் கண்காட்சிகள் நடைபெறவிருக்கும் நாளுக்கு முன்னதாக முன்பணமாகப் பெற்று செலவிட அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட

சம்பள கணக்கு அலுவலகம் மற்றும் மாவட்ட கருவூல அலுவலகத்திலிருந்து, விழா நடைபெறும் நாளுக்கு முன்னதாக முன்பணமாகப் பெறுவதற்கு ஏதுவாக 31.01.81 ஆம் தேதியிட்ட நிதித்துறையின் கடித எண்.136493/சம்பளம்/80–1–ல் உள்ள விதிகள் சிறப்பு நிகழ்வாக தளர்த்தப்படுகின்றன. இத்தொகைகளை சம்பந்தப்பட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு முன்பணமாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9. புகைப்படக் கண்காட்சி நடத்த சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிவுரைப்படி நடத்தப்பட வேண்டும் என்றும், முன்பணங்களை புகைப்படக் கண்காட்சி முடிவுற்ற நாளில் இருந்து 30 நாட்களுக்குள் உரிய செலவின பட்டியல்களுடன் நேர்செய்யப்பட வேண்டும் என்றும், அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், இச்செலவினம் குறித்து தமிழ்நாடு நிதித்தொகுப்பு தொகுதி விதிமுறைகளையும் ஒப்பந்தப்புள்ளி வரைமுறைகளையும் தக்க வருமான வரி பிடித்தல் நடைமுறைகளையும் தவறாது பின்பற்றுமாறும் அனைத்து செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. இந்த ஆணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அ.சா.கு.எண்.2236/தவ,அநி(ம) செ/2012, நாள்.06.02.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1515 (ஆயிரத்து ஐநூற்று பதினைந்து) உடன் இசைவளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ. இராசாராம்.
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9.
கணக்கு அலுவலர் (பொருட்காட்சி),
செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்.
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர், சென்னை–9.
நிதி (தமிழ், வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி)த்துறை, சென்னை–9.
நிதித் (வரவு செலவு/(பொது–II) துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

ஒம்/–
பிரிவு அலுவலர்